முயற்சியாண்மையும் நிதியியல் அறிவும் - முதலாம் தவணை வாழ்க்கையின் தூரநோக்கு (த) - தரம் 6

ව්‍යවසායකත්වය හා මූල්‍ය සාක්ෂරතාව - පළමු වාරය, ජීවන දැක්ම (දෙ) - 6 ශ්‍රේණිය

SC06EC1T -2026/328/82,900

# முயற்சியாண்மையும் நிதியியல் அறிவும்

முதலாம் தவணை

## வாழ்க்கையின் தூரநோக்கு

## தரம் 6



வணிகத்துறை
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

அச்சிடுதல் மற்றும் விநியோகம் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே


අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව විසින් සකස් කරන ලද වීඩියෝ ඊ තක්සලාව වෙබ් අඩවිය හා යූටියුබ් චැනලය මගින් නැරඹිය හැකිය.
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் ஆக்கப்பட்ட வீடியோக்களை e-Thaksalawa இன் இணையத்தளம் மற்றும் youtube அலைவரிசைகளினூடாகப் பார்வையிட முடியும்.
Videos produced by the Educational Publications Department can be viewed via the website and the YouTube channel of e-Thaksalawa.

https://www.e-thaksalawa.moe.gov.lk/

https://youtube.com/c/ethaksalawa-official

https://moe.gov.lk/students/nenasa-tv/

අන්තර්ක්‍රියාකාරී පාඩම්, වීඩියෝ පාඩම්, ශ්‍රව්‍ය ඉගෙනුම් ආධාරක, ක්‍රියාකාරකම් පත්‍රිකා, මාර්ගගත ප්‍රශ්නාවලි,පෙළපොත, අධ්‍යාපනික විනෝදාත්මක වැඩසටහන්, මාර්ගගත පාඨමාලා ඇතුළු තවත් අධ්‍යාපනික වැඩසටහන් සඳහා පිවිසෙන්න.
ஊடாடும் பாடங்கள், வீடியோப் பாடங்கள், செவிப்புல கற்றல் உதவிகள், செயலட்டைகள், நிகழ்நிலை வினாக்கள், பாடநூல்கள், கல்விசார் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், நிகழ்நிலை பாடநெறிகள் உட்பட மேலும் கல்விசார் நிகழ்ச்சிகளின் நிமித்தம் பிரவேசியுங்கள்.
Access for interactive lessons, video lessons, audio learning aids, activity sheets, online quizzes, textbooks, educational entertainment programs, online courses and more educational programs.

National Institute of Education
ChannelNIE
ජාතික අධ්‍යාපන ආයතනය
தேசிய கல்வி நிறுவகம்

වීඩියෝ වැඩසටහන්, පෙරහුරු ප්‍රශ්න පත්‍ර, ප්‍රායෝගික පරීක්ෂණ සහ සම්පත් පොත් යනාදී වටිනා අධ්‍යාපනික සම්පත් සඳහා පිවිසෙන්න
வீடியோ நிகழ்ச்சிகள், பயிற்சி வினாத்தாள்கள், செய்முறைச் சோதனைகள், வளநூல்கள் போன்ற பெறுமதியான கல்விவளங்களுக்காக பிரவேசியுங்கள்
Visit us for valuable educational resources; video programs, practice question papers, practical tests and resource books


நம் நாட்டு இளம் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்த மொடியூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையில் கவனமாக வைத்துப் படிக்கவும்

பாடசாலையின் பெயர்................................................................................................

| | மொடியூலைப் பெற்றுக்கொண்ட மாணவர் பெயர் | தரம் | வகுப்பாசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 2026 | | | |
| 2027 | | | |
| 2028 | | | |
| 2029 | | | |

# முயற்சியாண்மையும் நிதியியல் அறிவும்

முதலாம் தவணை

## வாழ்க்கையின் தூரநோக்கு

## தரம் 6

வணிகத்துறை
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

அச்சிடுதல் மற்றும் விநியோகம் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முயற்சியாண்மையும் நிதியியல் அறிவும்
தரம் 6
முதலாம் தவணை
மொடியூல் 01 - வாழ்க்கையின் தூரநோக்கு

முதலாம் பதிப்பு - 2025
© தேசிய கல்வி நிறுவகம்
ISBN: 978-624-6792-39-8

வணிகத்துறை
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம்: www.nie.ac.lk

இந்த மொடியூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
இல. 624, புளுகஹா சந்தி, கண்டி வீதி,
களனியில் அமைந்துள்ள மாதவி பெதும் (தனியார்) வரையறுக்கப்பட்ட
அச்சகத்தினால் அச்சிடப்பட்டு விநியோகிகப்பட்டது.

Published by : National Institute of Education

Printed by : Madhawee Pethum (Pvt) Ltd
No. 624, Bulugaha Junction, Kandy Road, Kelaniya.

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கைப் பொதுக்கல்வியின் காத்திரமான மறுசீரமைப்பு முயற்சியானது கற்போர் ஒவ்வொருவரினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தீர்க்கமான ஒரு பாதையை இலக்காகக் கொண்டுள்ளது. தேர்ச்சிகள் சார்ந்த கற்றல், பகுத்தறிவுச் சிந்தனை, ஆக்கத்திறன், 21 ஆம் நூற்றாண்டுத் திறன்கள், தொழினுட்ப முனைப்பு, விழுமியப் பிரசைத்துவம் போன்ற பல துறைகளை வலியுறுத்தத்தக்க வகையில் கலைத்திட்டம், கற்றல் - கற்பித்தல் முறைகள், கணிப்பீட்டு நடைமுறைகள் போன்றவற்றின் நவீனமயமாக்கம், இந்தக் கல்வி மறுசீரமைப்புச் செயன்முறையின் அடிப்படையாக அமைந்துள்ளது. கல்வியியலாளர்கள், பாடத்துறைச் சிறப்பறிஞர்கள், ஆசிரியர்கள் உட்படப் பல்வேறு தரப்பினர்களுடனான கலந்துரையாடல்களின் ஊடாகத் தேசிய கல்வி நிறுவகத்தின்மூலம் 2026 ஆம் ஆண்டில் தரம் 1 இலும் தரம் 6 இலும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் கலைத்திட்டங்களினதும் உரிய கற்றல் சாதனங்களினதும் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக, விசேட கரிசனையுடன் செயற்பட்ட கௌரவ பிரதமர், கல்வி அமைச்சின் செயலாளர், கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்கள், பாடப் பொறுப்பதிகாரிகள், பரீட்சை ஆணையாளர் நாயகம் மற்றும் அலுவலர்கள், கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் மற்றும் அலுவலர்கள் போன்றோர் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது. மேலும், இப்பணியின்போது விசேட கரிசனையுடன் செயற்பட்ட, தேசிய கல்வி நிறுவக தாபனப் பேரவை, கல்விசார் அலுவல்கள் சபை ஆகியவற்றின் அர்ப்பணிப்பை நன்றியுடனும் கௌரவத்துடனும் நினைவு கூருகின்றேன். இப்பணியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தேசிய கல்வி நிறுவக அலுவலர்கள் அனைவருக்கும் தேசத்தின் கௌரவம் உரித்தாகும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

**பேராசிரியர் மஞ்சுளா விதானபத்திரண**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
2025.08.11

## கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

தற்போதய உலகம் மிகவேகமாக முன்னேறி வருகின்றது. அதற்கேற்றவாறாகப் பாடசாலை மாணவர்களை நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான திறன்களுடன் தயார்படுத்துவது, கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள அனைவரினதும் தலையாய கடமையாகும்.

அதற்கமைய, 2026 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கலைத்திட்டத்திற்கு அமைய மொடியூலின் அடிப்படையிலான கற்றல் முறையை அறிமுகப்படுத்த வாய்ப்புக் கிடைத்தமை ஒரு சிறப்பான வெற்றியாகும் என்பதை இங்கு வலியுறுத்திக் கூறவேண்டும்.

ஒவ்வொரு பாடத்திற்கும் விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் கற்றல் சாதனங்கள், விமர்சன ரீதியான சிந்தனையைக் கூர்மைப்படுத்துவதன்மூலம் சிக்கலான பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளைக் கண்டறிதல், பல்வேறு கோணங்களிலும் விடயங்களைப் பகுப்பாய்வுசெய்தல் மற்றும் தர்க்கரீதியாக முடிவுகளையெடுத்தல் போன்ற திறன்களை வலுப்படுத்தப் பெரிதும் உதவும் என்று நம்புகின்றேன்.

நற்குணமும் நல்லறிவும் நிறைவாய்ப்பெற்ற மாணவர் பரம்பரையின் நற்கனவுகளை நனவாக்க, இந்தக் கற்றல் சாதனங்களை ஓர் ஒளிவிளக்காகப் பயன்படுத்தும்படி உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். மொடியூல் மற்றும் செயல்நூல்களையாக்கும் சிறப்பான பணிக்கு அளப்பரிய பங்களிப்பை நல்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டீ. ஏ. சுபாஷிணீ தெமட்டகொட**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
2025.08.11

# முன்னுரை

மாறிவரும் உலகில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான திறன்களை வழங்குவதே இந்தப் புதிய கலைத்திட்டத்தின் நோக்கமாகும். அவ்வாறே காலத்திற்குக் காலம் மாற்றமடையும் உலகிற்குப் பொருத்தமான திறன்களை வளர்த்து பேண்தகு அபிவிருத்திக்கும் சவால்களை வெற்றிகொள்வதற்கும் நாட்டு மக்களிடம் காணப்படும் உள்ளார்ந்த திறன்களை மேம்படுத்துவதற்கும் சமகாலக் கலைத்திட்டத்தில் பாட இற்றைப்படுத்தல்களை மேற்கொள்வதன்மூலமும் புதிய பாடங்களை அறிமுகப்படுத்துவதன்மூலமும் கற்றல் - கற்பித்தல் செயன்முறையைச் சமகாலத்திற்கு ஏற்றவாறு விருத்திசெய்யவும் இது உதவும். 2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் இந்தப் புதிய கலைத்திட்டத்தில் ஒவ்வொரு பாடத்திற்கும் மொடியூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அந்த வகையில், 2026 ஆம் ஆண்டில் தரம் 01, தரம் 06 ஆகிய வகுப்புகளுக்கும் 2027 இல் தரம் 02, தரம் 07 ஆகிய வகுப்புகளுக்கும் 2028 இல் தரம் 03, தரம் 08 ஆகிய வகுப்புகளுக்கும் 2029 இல் தரம் 04, தரம் 09 ஆகிய வகுப்புகளுக்கும் 2030 இல் தரம் 05 இற்கும் இந்தப் புதிய கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்கான மொடியூல்கள் மாணவர்களுக்கேற்ற புதிய கற்றல் முறைகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளதுடன், ஆசிரியர்கள் இதிலுள்ள செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவர். அத்துடன், இந்த மொடியூல்கள்மூலமாகச் சுயகற்றலுக்குத் தேவையான சூழலும் உருவாக்கப்படும். இவற்றின்மூலமாகப் பாடவிடயங்கள்பற்றிய அறிவைப் பெறுவதோடு அவ்வாறு பெற்ற அறிவைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பிரயோகிப்பர் எனவும் எதிர்பார்க்கின்றோம். இந்தக் கற்றல் சந்தர்ப்பங்கள் 21ஆம் நூற்றாண்டின் திறன்களான எழுத்தறிவு (literacy), தனிப்பட்ட திறன்கள் (interpersonal skills), விழுமியங்கள் (values) போன்றவற்றை வலுப்படுத்துவதற்குப் பெரிதும் உதவும்.

ஒவ்வொரு மொடியூலிலும், புதிய தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதற்குரிய வழிகாட்டுதல் களோடு, மாணவர்கள் தங்கள் செயலடைவு மற்றும் மொடியூல் இலக்குகளைச் சுயமாக மதிப்பிடுவதற்குத் தேவையான கணிப்பீட்டுக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. புதிய திறன்களையும் அறிவையும் பிரயோகிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதன்மூலம் மெய்யுறுதிக் கற்றலுக்குத் தேவையான வழிகாட்டுதலை இந்த மொடியூல்கள் வழங்குகின்றன. இவ்வாறான மொடியூல்களை அடிப்படையாகக்கொண்ட கலைத்திட்டத்தைத் தயாரிக்கும் பணிகளை மேற்கொண்ட கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர்கள், தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகங்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பான முன்னெடுப்பினை நாங்கள் மதிக்கின்றோம். மேலும், இந்த மொடியூல்களைத் தயாரிப்பதில் பங்களித்த பணிப்பாளர்கள், விரிவுரையாளர்கள், ஏனைய வளவாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பல்வேறு துறைசார்ந்தோரின் உயர்மட்ட சேவையினையும் நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். இந்த மொடியூல்களைப் பயன்படுத்தும்போது நீங்கள் பெறும் அனுபவங்கள், ஆலோசனைகள்பற்றிய பின்னூட்டல்கள் எங்களுக்கு மிகவும் அவசியமானவை. எனவே, எதிர்கால மொடியூல் மேம்பாட்டிற்காக உங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எமக்கு முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கே. ரஞ்சித் பத்மசிறி**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
2025.08.08

| | |
|---|---|
| **ஆலோசனை** | பேராசிரியர் மஞ்சுளா விதானபத்திரண<br>பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் |
| | கே. ரஞ்சித் பத்மசிறி<br>பிரதிப் பணிப்பாளர் நாயகம், விஞ்ஞான தொழினுட்பப் பீடம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **மேற்பார்வை** | கலாநிதி பீ. எச். குசுமாவதி<br>பணிப்பாளர், வணிகத்துறை /பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பதிற் கடமை)<br>கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும்<br>முகாமைத்துவ பீடம், தேசிய கல்வி நிறுவகம் |
| **இணைப்பாக்கம்** | ஐ. கைலாசபதி<br>விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம் |
| **எழுத்தாளர் குழு** | கலாநிதி பீ. எச். குசுமாவதி<br>பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பதிற் கடமை) |
| | சஞ்சய ரஜீவ் ரத்னஜீவ, விரிவுரையாளர் |
| | ஐ. கைலாசபதி, விரிவுரையாளர் |
| | டபிள்யூ. எம். ஏ. பீ. விஜேசூரிய<br>பணிப்பாளர் (ஓய்வு நிலை), தேசிய கல்வி நிறுவகம் |
| | சி. எல். எம். நவாஸ், ஆசிரிய ஆலோசகர் (ஓய்வு நிலை) |
| | ஆர். சஞ்சீவன், ஆசிரியர் சேவை |
| **பதிப்பாசிரியர் குழு** | |
| உள்வாரி | கலாநிதி பீ. எச். குசுமாவதி, பணிப்பாளர் /<br>பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பதிற் கடமை) |
| | கலாநிதி எஸ். கே. பிரபாகரன், பணிப்பாளர்<br>ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித்துறை |
| | ஐ. கைலாசபதி, விரிவுரையாளர் |
| வெளிவாரி | பேராசிரியர் பீ. நிசாந்த, கொழும்பு பல்கலைக்கழகம் |
| | கலாநிதி ம. கருணாநிதி, சிரேஷ்ட விரிவுரையாளர்<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். |
| | கலாநிதி அ. சிவநேசராஜா, கல்வி ஆலோசகர்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **பதிப்பாசிரியர் (மொழி)** | யூ. எல். உவைஸ், பிரதி ஆணையாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |
| **சரவை நோக்கு** | கலாநிதி எஸ். கே. பிரபாகரன், பணிப்பாளர்<br>ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித்துறை, தேசிய கல்வி நிறுவகம் |
| **கணினி வடிவமைப்பு** | அமிதா இந்திராணி<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், களனி. |
| | ஜே. எம். சத்துர மதுசங்க<br>ஊடகத் தொழினுட்பவியலாளர், தேசிய கல்வி நிறுவகம் |

## அறிமுகம்

முயற்சியாண்மையும் நிதியியல் அறிவும் என்ற பாடமானது 2026 ஆம் ஆண்டில் பாடசாலை முறைமையில் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் பாடமொன்றாகும். இப்பாடமானது தரம் 06 தொடக்கம் தரம் 11 வரையில் நடைமுறைப்படுத்தப்படும்.

முயற்சியாண்மையினைக் கற்பதினூடாக மாணவரொருவருக்குச் சமூகத்தில் சிறந்த பிரசையொருவராக சிறந்த வாழ்க்கையினை நடத்திச் செல்வதற்குத் தேவையான புத்தாக்கம், ஆக்கத்திறன், கற்பனைத்திறன், இடர்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளுதல், வாய்ப்புக்களை இனங்காணல் போன்ற அடிப்படைத் தேர்ச்சிகளைப் (core competent) பெற்றுக்கொள்ள முடியும். அதேபோன்று, நிதியியல் அறிவினூடாகப் பணம் உட்பட நிதிசார்ந்த சொத்துக்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகள் பலவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

முயற்சியாண்மையும் நிதியியல் அறிவும் பாடத்தில் தரம் 6 இல் மூன்று தவணைகளுக்குமாக மூன்று மொடியூல்களைக் கற்கவேண்டியிருக்கும். இந்த மொடியூலானது தரம் 6 இன் முதலாம் தவணைக்குரியது என்பதுடன் இம்மொடியூல் மூன்று செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. இங்கு தரப்பட்டுள்ள ஒவ்வொரு செயற்பாட்டினூடாகவும் மாணவர்களிடம் காணப்படுகின்ற ஆற்றல்கள் மற்றும் திறன்களை இனங்காண்பதற்கும் மாணவர்களின் எதிர்பார்ப்புக்களைத் தொடர்ச்சியான, ஆக்கபூர்வமான எண்ணமொன்றாகக் கட்டியெழுப்புவதற்கும் அந்த எண்ணத்தை நனவாக்குவதற்கும் செயற்படவேண்டியமுறை தொடர்பில் சிந்தித்துப் பார்ப்பதற்கும் இயலுமானதாகவிருக்கும். பொதுவாக எடுத்து நோக்கும்போது இம்மொடியூலைக் கற்பதினூடாக மாணவர்களது கற்பனைத்திறனை (imagination) வளர்த்துக்கொள்ள முடியும். இம்மொடியூலைத் தயாரிக்கும்போது தரம் 6 மாணவர்களின் வயது மட்டம் கவனத்திற்கொள்ளப்பட்டு உரிய பாட விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மிக வேகமான பொருளாதார வளர்ச்சியினை எதிர்பார்த்துச் செயற்படுகின்ற எமது நாட்டில், வணிகப்பிரிவுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளமையால் இப்பாடத்தை முன்வைப்பது காலத்திற்குப் பொருத்தமானது எனக் குறிப்பிடலாம்.

**கலாநிதி பீ. எச். குசுமாவதி**
பணிப்பாளர், வணிகத்துறை
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பதிற் கடமை)
கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

# உள்ளடக்கம்

**செயற்பாடு 01** - சுய திறன்களையும் பலவீனங்களையும் வெளிப்படுத்துவோம் ........................................ 01

**செயற்பாடு 02** - கனவு காண்போம், கனவுகளை நனவாக்குவோம்.... 07

**செயற்பாடு 03** - பிரச்சினைகளை இனங்கண்டு, தீர்வுகளை முன்வைப்போம் ........................................ 20

# மொடியூலின் நோக்கங்கள்

இம்மொடியூலைச் சிறப்பாகக் கற்பதன்மூலம் நீங்கள் பின்வரும் நோக்கங்களை அடைந்து கொள்வீர்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- சுயதிறன்கள், பலவீனங்கள், விருப்பு - வெறுப்புக்கள், வாய்ப்புக்கள் என்பவற்றை வெளிப்படுத்துதல்.
- சுய கனவினைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படையொன்றை ஏற்படுத்திக்கொள்ளல்.
- பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைத்தல்.

செயற்பாடு

01

# சுய திறன்களையும் பலவீனங்களையும் வெளிப்படுத்துவோம்



**இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்ட பின்னர் உங்களுக்கு,**

- சுய திறன்களையும் பலவீனங்களையும் வெளிப் படுத்திக் காட்டுவதற்கும்
- தாம் ஈடுபடுவதற்கு விரும்பும் - வெறுக்கும் செயற்பாடுகளைக் குறிப்பிட்டுக் கூறுவதற்கும்
- சுய திறன்கள், பலவீனங்கள், விருப்பு - வெறுப்புக்கள் மற்றும் வாய்ப்புக்களைக் கருத்திற்கொண்டு தான் எதிர்காலத்தில் ஈடுபடவுள்ள துறைகளை முன்னுரி மையின் அடிப்படையில் தெரிவுசெய்வதற்கும்

**முடியுமானதாக இருக்கும்.**

## செயற்பாடு 1

**சுய திறன்களையும் பலவீனங்களையும் அறிந்துகொள்வோம்.**

### படிமுறை 1.1

தனிநபர்களிடையே காணப்படுகின்ற திறன்கள் மற்றும் பலவீனங்களில் சில கீழே தரப்பட்டுள்ளன. இத்திறன்கள் மற்றும் பலவீனங்கள் தொடர்பில் நன்றாக அவதானம் செலுத்தவும்.



**திறன்கள் (Skills)**

- தயங்காது முன்வருதல்.
- சூழலைச் சுத்தமாக வைத்திருத்தல்.
- ஏனைய நபர்களுடன் ஒத்துழைத்துச் செயற்படல்.
- பிரச்சினைகளைச் சரியாக இனங்காணல்.
- நேரத்திற்கு வேலை செய்தல்.
- எண்மானத் (டிஜிட்டல்) தொழினுட்பத்தைப் பயன்படுத்துதல்.
- நீந்துதல்.
- ஏனையவர்களைக் கண்ணியப்படுத்துதல்.
- அர்ப்பணிப்புடன் செயற்படல்.
- குடும்பச் செயற்பாடுகளுக்கு உதவுதல்.

**பலவீனங்கள் (Weaknesses)**

- உணர்ச்சிவசப்படல்.
- எந்த நோக்கத்தையும் கொண்டிராதிருத்தல்.
- ஏனையவர்களின் கருத்துக்களுக்குச் செவிமடுக்காதிருத்தல்.
- வெற்றியினை மாத்திரம் எதிர்பார்த்தல்.
- ஏனையவர்களில் தங்கி வாழ்வதற்கு முயற்சித்தல்.
- தாய்மொழியைத் தவிர ஏனைய மொழிகள் தெரியாதிருத்தல்.
- தன்னைப்பற்றி மாத்திரம் சிந்தித்துச் செயற்படல்.

மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள திறன்கள் மற்றும் பலவீனங்கள் அடுத்து வருகின்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

**A** இங்கு, குறிப்பிடப்பட்ட திறன்கள் மற்றும் பலவீனங்கள் தொடர்பில் மீண்டும் அவதானம் செலுத்தவும்.

**B** அவற்றில் ஒரு சில திறன்கள் மற்றும் பலவீனங்கள் உங்களிடத்திலும் காணப்படலாம். அவற்றை வெவ்வேறாகக் குறித்துக் கொள்ளவும்.

**C** அவ்வாறு குறித்துக்கொண்ட திறன்கள் மற்றும் பலவீனங்கள் தவிர்ந்த வேறு திறன்கள் மற்றும் பலவீனங்கள் உங்களிடத்தில் காணப்படுமாயின் அவற்றையும் வேறாகக் குறித்துக் கொள்ளவும்.

உங்களிடம் காணப்படுகின்ற திறன்கள் மற்றும் பலவீனங்களை ஆக்கப்பூர்வமாகத் தயாரித்து ஆசிரியரிடம் சமர்ப்பிக்கவும். அவரின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**படிமுறை 1.1 இன்கீழ் நீங்கள் செய்த செயற்பாட்டின் பெறுபேற்றினை அளவிடுகின்ற முறையினைக் காட்டுகின்ற அட்டவணை**

| நியதிகள் | பெறுபேற்றினை அளவிடும் திறன் மட்டம் | | | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|---|
| | **மிக நன்று** (10 - 08 புள்ளிகள்) | **நன்று** (07 - 04 புள்ளிகள்) | **விருத்தியடைதல் வேண்டும்** (03 - 01 புள்ளிகள்) | |
| 1. இனங்கண்ட சுய திறன்களையும் பலவீனங்களையும் முன்வைத்தல் | ஆக்கரீதியான முறையில் முன்வைத்தல் (திறன்கள், பலவீனங்கள் என்பவற்றில் எட்டினையாவது உள்ளடக்குதல் வேண்டும்) | அட்டவணையொன்றாக அல்லது பட்டியலொன்றாக முன்வைத்தல் (திறன்கள், பலவீனங்கள் என்பவற்றில் ஐந்தினையாவது உள்ளடக்குதல் வேண்டும்) | திறன்கள், பலவீனங்கள் குறிப்பிடப்பட்டிருப்பினும் அவை குறைபாட்டுடனும் பூரணமின்றியும் காணப்படல் | ---<br>10 |
| 2. பொது வாழ்க்கைக்குப் பயனுள்ள திறன்களைக் காட்சிப் படுத்துதல் | ஆர்வம், அர்ப்பணிப்பு, நேர முகாமைத்துவம், வேலையினை மிக அவதானமாகச் செய்தல் போன்றன மிகவும் திருப்திகரமான நிலையில் காணப்படல் | ஆர்வம், அர்ப்பணிப்பு, நேர முகாமைத்துவம், வேலையினை மிகவும் அவதானமாகச் செய்தல் போன்றன திருப்திகரமான நிலையில் காணப்படல் | ஆர்வம், அர்ப்பணிப்பு, நேர முகாமைத்துவம், வேலையினை மிக அவதானமாகச் செய்தல் போன்றன சாதாரண நிலையில் காணப்படல் | ---<br>10 |
| **மொத்தப் புள்ளிகள்** | | | | ---<br>20 |

நீங்கள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் உங்கள் வெற்றி தொடர்பில் தீர்மானத்திற்கு வரக்கூடிய முறை கீழே தரப்பட்டுள்ளது.

| **புள்ளிகள்** | 20 - 15 | 14 - 09 | 08 அல்லது அதை விடக்குறைவு |
|---|---|---|---|
| **உங்கள் அடைவின் தன்மை** | மிக நன்று | நன்று | விருத்தியடைதல் வேண்டும் |



## படிமுறை 1.2

படிமுறை 1.1 இன்கீழ் நீங்கள் செய்த செயற்பாடுகள் தொடர்பில் மீண்டும் அவதானம் செலுத்தவும். இதனூடாக உங்களிடம் காணப்படுகின்ற திறன்கள் மற்றும் பலவீனங்களை அறிந்து கொண்டிருப்பீர்கள். இதுதவிர, தனிநபர்களில் அவர்கள் ஈடுபடுவதற்கு விருப்பமான மற்றும் வெறுப்பான விடயங்களும் காணப்படலாம். தனிநபர்கள் தமது சுய எதிர்பார்க்கைகள் தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்ளும்போது தமது திறன்கள் மற்றும் பலவீனங்கள் தொடர்பாக மாத்திரமன்றி தாம் விரும்பும் மற்றும் விரும்பாத விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துவது மிகமுக்கியமானதாகும்.

நீங்கள் அதிகமாக விரும்பும் மற்றும் அதிகமாக வெறுக்கும் செயற்பாடுகளைக் காட்டக்கூடியவாறு பின்வரும் முறையிலான அட்டவணையொன்றைத் தயாரிக்கவும். (தலா 3 விடயங்களை உள்ளடக்கினால் போதுமானது.) உங்களுடைய தேடியறிதல்களை ஆசிரியரிடம் சமர்ப்பிக்கவும்.




| **நீங்கள் அதிகமாக விரும்பும் செயற்பாடுகள்** | **நீங்கள் அதிகமாக வெறுக்கும் செயற்பாடுகள்** |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |

## படிமுறை 1.3

சமூகத்தில் வசிக்கின்ற பல்வேறு நபர்கள், பல்வேறு துறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். உங்களின் பெற்றோர், முதியோர், உறவினர்கள் தொடர்பில் சிந்தித்துப் பாருங்கள். (உதாரணம்: வியாபாரம், விவசாயம், கல்வி, விளையாட்டு, சுகாதாரம், கணினி போன்ற துறைகள்) இவ்வாறு, பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களில் சிலர் வெற்றியடைகின்றனர். இன்னும் சிலர் தாம் எதிர்பார்த்த வெற்றியினை அடைவதில்லை.







தனிநபர்கள் ஈடுபடுகின்ற துறைகளின் வெற்றியில் அல்லது தோல்வியில் அவர்களின் திறன்கள், பலவீனங்கள், விருப்புக்கள், வெறுப்புகள் என்பனவும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இதுவரை நீங்கள், உங்களின் திறன்கள் மற்றும் பலவீனங்கள் தொடர்பிலும் நீங்கள் ஈடுபட விரும்பும் - வெறுக்கும் செயற்பாடுகள் தொடர்பிலும் தெளிவினைப் பெற்றிருப்பீர்கள். நீங்களும் எதிர்காலத்தில் ஈடுபடுவதற்கு எதிர்பார்த்துள்ள ஏதாவது துறைகள் காணப்படலாம். அதற்கேற்ப, அந்த துறைகள்பற்றிச் சிந்தித்துப் பின்வரும் அறிவுறுத்தல் களைப் பின்பற்றி அவை தொடர்பான தகவல்களை முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

**அறிவுறுத்தல்கள்:**

**A** எதிர்காலத்தில் நீங்கள் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கின்ற துறைகள் தொடர்பில் சிந்தித்துப் பாருங்கள்.

**B** இதன்போது உங்களின் திறன்கள், பலவீனங்கள் மற்றும் நீங்கள் ஈடுபடுவதற்கு விரும்பும் - வெறுக்கும் துறைகள் தொடர்பிலும் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய உதவிகள் தொடர்பிலும் கண்டறியுங்கள்.

**C** பின்னர், அந்தத் துறைகளில் நீங்கள் மிகவும் வெற்றிகரமாக ஈடுபடுவதற்கான துறைகள் மூன்றினை உங்களின் விருப்பொழுங் கிற்கேற்ப முன்னுரிமைப்படுத்துங்கள்.

**D** நீங்கள் எதிர்காலத்தில் ஈடுபடுவதற்கு எதிர்பார்த்துள்ள மூன்று துறைகள் தொடர்பில் பின்வரும் முறையிலமைந்த அட்டவணை யொன்றை உங்களது பயிற்சிப் புத்தகத்தில் பிரதிசெய்து அதில் தகவல்களை முன்வையுங்கள்.

| எதிர்காலத்தில் நீங்கள் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கின்ற துறைகள் | | |
|---|---|---|
| **ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கின்ற துறைகள்** (முன்னுரிமை ஒழுங்கிற்கேற்ப) | **துறைகளைத் தெரிவு செய்தமைக்கான காரணங்கள்** | **இது தொடர்பாக உங்களுக்குச் சாதகமான காரணிகளும் கிடைக்கக்கூடிய உதவிகளும்** உதாரணம் - குடும்பத்தவரின் உதவிகள் |
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

நீங்கள் மேலே பூரணப்படுத்திய அட்டவணையை ஆசிரியரிடம் சமர்ப்பித்து மதிப்பீடொன்றினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

செயற்பாடு

02

# கனவு காண்போம் கனவுகளை நனவாக்குவோம்



**இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்ட பின்னர் உங்களுக்கு,**

- உங்கள் சுய கனவினை எண்ணமொன்றாக வெளிப்படுத்துவதற்கும்
- உலகில் பிரசித்திபெற்ற முயற்சியாளர்களின் வரலாறுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கும்
- வெற்றியடைந்த தனிநபர்களிடம் காணப்பட்ட கனவுகளைப் பரிசீலிப்பதற்கும்
- சுய கனவினை நனவாக்கிக் கொள்வதன்மூலம் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் நாட்டிற்கும் கிடைக்கப் பெறுகின்ற நன்மைகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்கும்

**முடியுமானதாக இருக்கும்.**

## செயற்பாடு 2

### கனவு காண்போம் கனவுகளை நனவாக்குவோம்



பின்வரும் தகவல்களைக் கவனமாக வாசியுங்கள்

பறவைகள் பறப்பதை அவதானித்த “ரைட் சகோதரர்களின் கனவு” வானத்தில் பறக்கக்கூடிய விமானமொன்றை உருவாக்குவதாக அமைந்தது. “இரும்புகளை வானத்தில் பறக்கவைக்க முடியாது” என்பது அக்கால விஞ்ஞானிகளின் கருத்தாக இருந்தாலும் அக்கருத்தினை சவாலுக்கு உட்படுத்தி ரைட் சகோதரர்கள் ஆகாய விமானமொன்றை உருவாக்கி அவர்களின் கனவினை நனவாக்கினர். ரைட் சகோதரர்களின் கனவு இதனூடாக நனவாக்கப்பட்டது. உலகில் பெரும்பாலான புத்தாக்கவியலாளர்களின் கண்டுபிடிப்புக்களானவை ஆரம்பத்தில் அவர்களின் மனதில் கனவுகளாக உருவாகிய எண்ணங்களாகும்.



♦♦♦



உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன், உலகத்தை நவீனமயப்படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த பல்வேறு கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டார். மின்குமிழ் (bulb), புகைப்படக்கருவி (camera), நீர் இறைக்கும் இயந்திரம் (water pump) போன்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட அவரது கண்டுபிடிப்புக்களானவை அவர் கனவு கண்டு நனவாக்கிக் கொண்டவைகளாகும்.

இவ்வாறான கனவுகள், தனிநபர்களின் தூக்கத்தின்போது வருபவைகளல்ல. மாறாக, விழித்திருக்கும்போது அவர்கள் மனதில் உருவாகின்ற எண்ணங்கள் அல்லது கருத்துக்களாகும்.

தனிநபர்கள் விழித்திருக்கும்போது காண்கின்ற கனவினைப் பிற் காலத்தில் பயனுள்ள சிந்தனையாகமாற்றி அதனைச் செயற்பாடாக மாற்ற முடியும்.

## Dream transform into thought and thought result in action.

| கனவு<br>Dream | சிந்தனை (எண்ணம்)<br>Thought | செயற்படுத்தல்<br>Action |
|---|---|---|




### படிமுறை 2.1

பிரசித்திபெற்ற சில முயற்சியாளர்களைப்பற்றி ஞாபகப்படுத்துவோம். ஏ. ரீ. ஆரியரத்ன, விக்டர் ஹெட்டிகொட, அச்சலா சமரதிவாகர, எலான் மஸ்க், ஸ்டீவ் ஜொப்ஸ், மார்க் சகர்பேர்க், ஜக்மா, சுக்கிரோ ஹொண்டா, ரத்தன் டாட்டா, பில்கேட்ஸ் போன்றவர்கள் தொடர்பாகவும் அவர்களது வணிகங்கள் தொடர்பாகவும் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். தமது சுய கனவுகளை நனவாக்கிக்கொண்ட முயற்சியாளர்கள் என இவர்களை இனங்காண முடியும். “உலகை வென்ற முயற்சியாளர்கள்” என்ற தலைப்பின்கீழ் அவ்வாறான ஒருசிலரின் தகவல்கள் தரப்பட்டுள்ளன.



- இப்போது, உங்களது ஆசிரியரின் வழிகாட்டலுக்கும் அறிவுறுத்தல்களுக்குமேற்ப குழுவாக ஒன்றுசேர்ந்து, செயற்பாடொன்றில் ஈடுபடத் தயாராகவும்.
- ஆசிரியரின் உதவியுடன் உலகப் பிரசித்திபெற்ற முயற்சியாளர்களில் இருவரைத் தெரிவுசெய்துகொள்ளவும்.
- அந்த முயற்சியாளர்கள்பற்றிய கதையை நன்றாக வாசிக்கவும். அதில் அவர்கள் செய்த வணிகச் செயற்பாடுகள் தொடர்பிலும் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் மற்றும் அவர்களின் முக்கியத்துவம் தொடர்பிலும் குழுவாகக் கலந்துரையாடலில் ஈடுபடவும்.
- பின்னர், ஆசிரியரின் வழிகாட்டலுக்கேற்ப நீங்கள் தெரிவுசெய்த இரு முயற்சியாளர்கள் தொடர்பான தகவல்களை வகுப்பிலுள்ள ஏனைய மாணவர்களுக்கும் தெரியப்படுத்தவும்.
- மேலே குறிப்பிட்ட செயற்பாடு முடிவடைந்தவுடன் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்குத் தயாராகவும். இதன்போது ஆசிரியரின் வழிகாட்டலுக்கேற்ப மீண்டும் குழுவாக இணைந்துகொள்ளவும்.
- சமூகத்திற்குப் பயனுள்ள வகையில் சேவையாற்றுகின்ற அல்லது சேவையாற்றிய பிரதேச அல்லது தேசியரீதியில் பிரசித்திபெற்ற நபர்கள் காணப்படுகின்றனர். அவ்வாறான ஆண் அல்லது பெண் ஒருவரின் வாழ்க்கை வரலாறு தொடர்பாகக் கலந்துரையாடவும்.
- அவ்வாறு, இனங்காணப்பட்ட நபரின் கனவு எவ்வாறானதாக இருந்தது என்பது தொடர்பாகக் குழுவாகக் கலந்துரையாடித் தீர்மானமொன்றுக்கு வரவும்.
- குழுவாகக் கண்டறிந்த தகவல்களை ஒழுங்குபடுத்தி வகுப்பில் முன்வைப் பதற்குத் தயாராகவும். இதற்காகப் பின்வரும் முறையிலமைந்த அட்டவணை யைப் பயன்படுத்த முடியும்.

| குழுவினால் இனங்காணப்பட்ட நபரின் பெயர் | இனங்காணப்பட்ட நபரின் வணிகம் அல்லது சமூக ரீதியான சேவைகள் / செயற்பாடுகள் | உங்களது கருத்தின்படி அந்த நபரின் கனவு |
|---|---|---|
| | | |



# உலகை வென்ற முயற்சியாளர்கள்



## ஏ. ரீ. ஆரியரத்ன

(A.T. Ariyaratne)

“இலங்கையின் காந்தி” என அழைக்கப்படும் இவர், சர்வோதயம் என்னும் அமைப்பை உருவாக்கினார். கிராமிய மக்களின் வறுமையைக் குறைப்பதற்கும் அவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கும் முயற்சித்தார். அத்துடன், மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் கடுமையாக உழைத்த முயற்சியாளராவார். இவர் சமூகத்திற்கு அளப்பெரிய சேவைகளை ஆற்றியமையால் சமூக முயற்சியாளர் எனவும் அழைக்கப்பட்டார். அன்பு செலுத்துதல், கருணை காட்டுதல், ஒத்துழைப்பு வழங்குதல், உதவி செய்தல் போன்ற பண்புகள் இவரின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தன. “காந்தி சமாதானத்திற்கான” விருதினைப் பெற்றுக்கொண்டதினூடாக இலங்கைக்கு நன்மதிப்பைப் பெற்றுத்தந்த ஒருவராகக் கருதப்படுகின்றார்.



## விக்டர் ஹெட்டிகொட (Victor Hettigoda)

ஆயுர்வேதம் மற்றும் மூலிகை மருந்து உற்பத்தியில் இவர் முன்னோடியாகத் திகழ்ந்தார். மூலிகைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மருந்துகளை நாட்டு மக்களுக்கு வழங்கிய இவர், இலங்கையில் பிரபல்யம் பெற்ற ஆயுர்வேத வைத்தியராவார். இவர் "சித்தாலேப வைத்தியர்" எனும் பெயரில் பிரபல்யம் பெற்றவராவார். பல்வேறு கிறீம் வகைகள், எண்ணெய் வகைகள், பற்பசை வகைகள் போன்ற உற்பத்திகளை சிறியளவில் மேற்கொண்டு ஆரம்பித்த இவரின் வணிகமானது இன்று "சித்தாலேப" எனும் பெயரில் எமது நாட்டில் புகழ்பெற்ற நிறுவனமொன்றாக வளர்ந்துள்ளது. அர்ப்பணிப்பு, கடின உழைப்பு போன்றவற்றுடன்கூடிய இவரது உற்பத்திகள் தரமானவையாகவும் நம்பகத்தன்மையுடையவையாகவும் இருப்பது இவரின் வெற்றிக்கான பிரதான காரணங்களாகும்.



## பில் கேட்ஸ் (Bill Gates)

மைக்ரோ சொப்ட் நிறுவுனராவார். தொழினுட்பத்தைப் பயன்படுத்தி வீடு, பாடசாலை, அலுவலகம் என்பவற்றில் வேலைகளை இலகுபடுத்திக் கொடுப்பதே இவரது இலக்காக இருந்தது. பின்னர், "பில் மற்றும் மெலின்டா கேட்ஸ்" எனும் நிறுவனத்தை நிறுவிக் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளின் முன்னேற்றத்திற்காகத் தனது செல்வத்தில் கூடுதலான பகுதியினைச் செலவுசெய்து மக்களுக்கு உதவினார். உயர்தரமான சிந்தனைகளின்மூலமும் இரக்க சுபாவத்தினூடாகவும் உலகையே மாற்றலாம் என்பது இவர் எமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடமாகும்.



## அச்சலா சமர திவாகர

(Achala Samaradiwakara)

கிராமிய உற்பத்தியாளர்கள் பாரியளவிலான சந்தை வாய்ப்புக்களைத் தேடிக்கொள்வதில் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் என்பதை இவர் அவதானித்தார். இதற்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பத்தரமுல்ல தியத்த உயனவில் அதிகளவான கடைகளை ஒதுக்கிக் கிராமிய உற்பத்தியாளர்களின் விவசாய மற்றும் கைவினைப்பொருள்களை விற்பனை செய்வதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்தார். அதன் பின்னர், கொழும்பு நகரத்திற்கு அண்மையில் “குட் மார்கட்” (Good Market) எனும் பெயரில் சிறப்புச் சந்தையொன்றை ஆரம்பித்தார். இவர் கிராமிய உற்பத்திகளைக் கொழும்பில் வசிக்கும் உயர் வருமானம் பெறுகின்ற பிரிவினர்களுக்கு விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுத்தார். அதேபோன்று, சேதனப்பசளையைப் பயன்படுத்தி தமது உற்பத்திகளை மேற்கொள்கின்ற கிராமிய உற்பத்தியாளர்கள் வெளிநாட்டுச் சந்தைகளில் அவற்றை விற்பனை செய்வதற்கான தரச்சான்றிதழ்களைக் குறைந்த செலவில் பெற்றுக்கொள்வதற்கான முறையொன்றும் இவரால் உருவாக்கப்பட்டது. இவ்வாறு கிராமங்களிலுள்ள விவசாய உற்பத்திகள் மற்றும் கைவினைப் பொருள்களை சிறியளவில் உற்பத்தி செய்பவர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பத்தை இவர் பெற்றுக்கொடுத்தார்.



## ஸ்டீவ் ஜொப்ஸ் (Steve Jobs)


அப்பிள் (Apple) நிறுவனத்தை ஆரம்பித்தவர்களுள் ஒருவராவார். iphone, ipad, போன்றவற்றில் புத்தாக்கங்களையும் புரட்சிகரமான தொழினுட்ப மாற்றங்களையும் ஏற்படுத்தியவர் இவராவார். ஆரம்பத்தில் இவருக்குப் பல சவால்கள் காணப்பட்டாலும் ஆக்கபூர்வமான தன்மை, விடா முயற்சி என்பவற்றினூடாக வெற்றியீட்டலாம் என்பதை உலகிற்குக் காட்டியவராவார். அதேபோன்று, ஏனையவர்களைப் போலன்றி வித்தியாசமாகச் சிந்தித்தல் மற்றும் எளிமையாகவும் சிறப்பாகவும் செயற்படக்கூடிய கருவிகளை உருவாக்குதல் என்பவற்றில் இவர் கூடுதலான நம்பிக்கையை வைத்திருந்தார். கனவுகளை நனவாக்குவதாயின் அர்ப்பணிப்புடன் கருமமாற்ற வேண்டியிருக்கும் என்பதே நாம் இவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும்.




## எலான் மஸ்க் (Elon Musk)

மின்சார மோட்டார் வாகனம் (Tesla) மற்றும் ஸ்பேஸ்எக்ஸ் (SpaceX) என்பவற்றை உருவாக்கி பிரபல்யம் பெற்றவராவார். இவர் தொலைநோக்குடைய முயற்சியாளராவார்.

இவருடைய கனவு, சூழல்நேய உலகை உருவாக்குவதும் மனிதர்களை வேற்றுக்கோள்களில் குடியேறச் செய்வதுமாகும். அத்துடன், இவர் விஞ்ஞானத்துடன் இணைந்து, கடின உழைப்பின்மூலம் பூகோளரீதியான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையுடையவராவார். மிகச் சிறப்பான எண்ணங்களுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டால் பெரும்பாலான சவால்களை வெற்றிகொள்ளமுடியும் என்பதே நாம் இவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும்.



## மார்க் சகர்பேர்க் (Mark zuckerberg)

முகநூலினூடாகச் சமூக வலைத்தளத்தில் புரட்சிகரமான மாற்றமொன்றை ஏற்படுத்திய அதன் ஆரம்பகர்த்தா இவராவார். மக்களுக்கு இணைய வலையமைப்பினூடாகத் தொடர்புகளை ஏற்படுத் தக்கூடிய செயலியை உருவாக்குவதில் இவர் வெற்றி பெற்றார். அப்போது இவருக்கு 19 வயதாகும். இவரது இம்முயற்சியினூ டாக உலகிலுள்ள மக்களும் அவர்களது குடும்பங்களும் பூகோள ரீதியில் விலகியிருந்தாலும் முகநூலினூடாக நெருக்கமான தொடர்புகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றது. இவர், புத்தாக்க ரீதியான எண்ணங்கள்மூலம் உலகை மாற்றியமைத்த தனி நபரொரு வருக்கான உதாரணமாகக் கருதப்படுகின்றார்.



## ரத்தன் டாட்டா (Ratan Naval Tata)

இந்தியாவைச் சேர்ந்தவரான இவர் "டாட்டா குழும வணிகத்தின்" தலைவர் ஆவார். இக்குழும வணிகமானது பல்வேறு வகையான வாகனங்களை உற்பத்தி செய்வதுடன் இரும்பு, தேயிலை, தொழினுட்ப உபகரணங்கள் என்பவைகளையும் உற்பத்தி செய்கின்றது. விலை குறைந்த மோட்டார் வாகனங்களாகிய நனோ கார் உள்ளடங்கலாகப் பல்வேறு வகையிலான டாட்டா குழுமத்தின் வாகனங்கள் இலங்கையில் இன்று தாராளமாகக் காணக்கூடியதாகவுள்ளன. ரத்தன் டாட்டா வணிகரொருவராக மாத்திரமன்றி மக்களின் கல்வி, சுகாதார மேம்பாட்டுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் இளைய முயற்சியாளர்களுக்கும் தனது செல்வத்திலிருந்து பல்வேறு உதவிகளையும் வழங்கியுள்ள சமூக சேவையாளருமாவார். கடினமாக உழைத்தல், நேர்மையாக வேலை செய்தல், சமூக சேவை செய்தல் என்பவை நாம் இவரிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களாகும்.

## படிமுறை 2.2

- இதுவரையில், முயற்சியாளர்களின் பண்புகள், கனவுகள் தொடர்பில் ஓரளவு விளக்கத்தைப் பெற்றிருப்பீர்கள். அதேபோன்று, அவர்கள் அக்கனவுகளைச் சிந்தனையாகவும் பின்னர், அவற்றைச் செயல் வடிவமாகவும் மாற்றினர். உதாரணமாக ரைட் சகோதரர்கள் அவர்களின் கனவினை நனவாக்கிக்கொண்டமை தொடர்பாகச் சிந்தித்துப் பாருங்கள். இவ்வாறு கனவினை நனவாக்கிக் கொள்வதன் மூலம் குறித்த நபர்களுக்கும் அவர்களின் குடும்பத்திற்கும் நாட்டிற்கும் பாரியளவு நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- நீங்கள் இதுவரையில் எதிர்காலத்தில் ஈடுபட எதிர்பார்க்கின்ற துறைகளை அறிந்திருப்பீர்கள். அந்தத் துறைகளைக் கருத்திற் கொண்டு உங்கள் எதிர்காலக் கனவினைக் கட்டியெழுப்புங்கள்.
- பின்னர், உங்களது கனவு தொடர்பிலான தகவல்களைப் பின்வரும் அறிவுறுத்தல்களுக்கேற்ப முன்வைப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுங்கள்.

**அறிவுறுத்தல்கள்:**

**A** உங்களது கனவினைச் சிந்தனையொன்றாகவும் எளிமையாகவும் வெளிப்படுத்துவதற்கு முயற்சியுங்கள்.

**B** பின்னர், அந்தச் சிந்தனையை உங்களது சொந்த மொழிநடையில் எழுதிக் காட்டுங்கள்.

**C** அக்கனவானது, உங்களுக்கும் உங்களது குடும்பத்திற்கும் நாட்டிற்கும் எவ்வகையில் பயன்களைப் பெற்றுத்தரும் என்பது தொடர்பாகச் சிந்தித்துப் பாருங்கள்.

**D** அதில், ஒவ்வொரு பிரிவினருக்கும் கிடைக்கும் பயன்களைப் பட்டியற்படுத்துங்கள்.

கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள தலைப்புக்களின்கீழ் நீங்கள் இனங்கண்ட விடயங்களை முன்வையுங்கள்.

எனது கனவு : ........................................................................

| எனது கனவு, எனக்குப் பயனுள்ளதாக அமைகின்ற முறை | எனது கனவு, குடும்பத்திற்குப் பயனுள்ளதாக அமைகின்ற முறை | எனது கனவு, நாட்டிற்குப் பயனுள்ளதாக அமைகின்ற முறை |
|---|---|---|
| | | |

## படிமுறை 2.3

உங்களுக்கு மாத்திரமன்றி ஏனையவர்களுக்கும் கனவுகள் காணப் படலாம். அவை தொடர்பில் அறிந்துகொள்வதற்கு முயற்சிப்போம். பின்வரும் பிரிவினர்களை உள்ளடக்கியதாக இரு நபர்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.

1. தனது வகுப்பிலுள்ள நண்பன் / நண்பி
2. பாடசாலையில் வேறொரு வகுப்பிலுள்ள நண்பன் / நண்பி
3. குடும்பத்திலுள்ள உறுப்பினரொருவர் அல்லது உறவினரொருவர்

அவர்களைச் சந்தித்துப் பின்வரும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும்.

**A** எதிர்காலக் கனவு

**B** அவ்வாறான கனவொன்றை ஏற்படுத்திக்கொண்டமைக்கான காரணங்கள்

**C** அக்கனவினை நனவாக்குவதினூடாக அவருக்குக் கிடைக்கும் பயன்கள்

**D** அக்கனவினை நனவாக்குவதினூடாக நாட்டிற்குக் கிடைக்கும் பயன்கள்

இரு நபர்களிடமும் நீங்கள் பெற்றுக்கொண்ட தகவல்களைப் பின்வரும் அட்டவணையில் முன்வையுங்கள்.

| தகவல்களைப் பெற்றுக்கொண்ட நண்பன் / நண்பியின் பெயர் அல்லது உறவுமுறை | அவர்களின் கனவு A | கனவினை ஏற்படுத்திக் கொண்ட மைக்கான காரணங்கள் B | கனவினை நனவாக்குவதன் மூலம் அவர்களுக்குக் கிடைக்கும் பயன்கள் C | கனவினை நனவாக்குவதன் மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் பயன்கள் D |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |

படிமுறை 2.3 இன்கீழ் நீங்கள் செய்த செயற்பாட்டின் பெறுபேற்றினை அளவிடுகின்ற முறையினைக் காட்டுகின்ற அட்டவணை

| நியதிகள் | பெறுபேற்றினை அளவிடும் திறன் மட்டம் | | | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|---|
| | **மிக நன்று** (10 - 08 புள்ளிகள்) | **நன்று** (07 - 04 புள்ளிகள்) | **விருத்தியடைதல் வேண்டும்** (03 - 01 புள்ளிகள்) | |
| 1. தனிநபர் காணுகின்ற கனவு மற்றும் அதனை உருவாக்கிக் கொண்டமைக்கான காரணங்களை முன்வைத்தல் | இருவரின் கனவுகளைத் தெளிவாக எழுதி அக்கனவுகளை ஏற்படுத்திக் கொண்டமைக்கான காரணங்களை ஒவ்வொரு பிரிவினருக்குமேற்ப காட்டுதல் | ஒரு பிரிவினரின் கனவுகள் மற்றும் அக்கனவினை ஏற்படுத்திக் கொண்டமைக்கான காரணங்களைக் காட்டுதல் | கனவு மற்றும் கனவுகளை ஏற்படுத்திக் கொண்டமைக்கான காரணங்கள் தெளிவின்றிக் காணப்படுதல் | ---<br>10 |
| 2. குறித்த கனவொன்றை நனவாக்குவதன் மூலம் கனவு காண்பவருக்கும் நாட்டிற்கும் கிடைக்கும் பயன்களைச் சுட்டிக்காட்டுதல் | இரு பிரிவினராலும் தனிநபருக்கும் நாட்டிற்கும் கிடைக்கும் பயன்களை வெவ்வேறாகக் காட்டுதல் | ஒரு பிரிவினரால் மட்டும் தனிநபருக்கும் நாட்டிற்கும் கிடைக்கும் பயன்களை வெவ்வேறாகக் காட்டுதல் | கிடைக்கும் பயன்கள் குறைபாட்டுடனும் தெளிவின்றியும் காணப்படுதல் | ---<br>10 |
| **மொத்தப் புள்ளிகள்** | | | | ---<br>20 |

நீங்கள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் உங்கள் வெற்றி தொடர்பில் தீர்மானத்திற்குவரக்கூடிய முறை கீழே தரப்பட்டுள்ளது.

| **புள்ளிகள்** | 20 - 15 | 14 - 09 | 08 அல்லது அதை விடக் குறைவு |
|---|---|---|---|
| **உங்கள் அடைவின் தன்மை** | மிக நன்று | நன்று | விருத்தியடைதல் வேண்டும் |



செயற்பாடு

03

# பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வுகளை முன்வைப்போம்




**இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்ட பின்னர் உங்களுக்கு,**

- சமூகத்திலுள்ள தனிநபர்கள் முகங்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளை இனங்காண்பதற்கும்
- பிரச்சினைகளுக்குப் பொருத்தமான தீர்வுகளை முன்வைப்பதற்கும்
- பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கக்கூடிய பொருத்தமான செயன்முறைகளைப் பட்டியற்படுத்துவதற்கும்

**முடியுமானதாக இருக்கும்.**

## செயற்பாடு 3

### பிரச்சினைகளை இனங்காணலும் தீர்வுகளை முன்வைத்தலும்

பாடசாலை மாணவனான ரவியின் கதையில் கவனம் செலுத்துவோம்.
ஒரு வெற்றிகரமான முயற்சியாளனின் புதிய உற்பத்தியானது மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வாக அமைகின்றது. எனவே, மக்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளை விளங்கி அவற்றிற்கு ஆக்கபூர்வமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பது முக்கியமானதாகும்.

இலங்கையானது இயற்கை வாசனைத் திரவியங்களுக்குப் பெயர் பெற்ற நாடாகும். விவசாயப் பொருளொன்றாகிய கறுவாவைப் பயன்படுத்தி ரொபியினை (toffee) உற்பத்தி செய்வதில் ரவி எனும் இளம் முயற்சியாளர் வெற்றியடைந்துள்ளார்.



கறுவா, கராம்பு, மிளகு, ஏலம் என்பவற்றைப் பொதிசெய்து வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்வதையே ரவியின் குடும்பமானது தமது வாழ்வாதாரத் தொழிலாகச் செய்து வந்தது. இயற்கையான வாசனைத் திரவியங்களுக்குப் பிரபல்யம் பெற்ற நாடாக இலங்கை காணப்பட்டாலும் அவ்வாசனைத் திரவியங்களில் மாற்றங்கள் செய்யாமல் அதேநிலையில் பொதி செய்யப்பட்டு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு அவை விற்பனை செய்யப்படுகின்றன. இது தொடர்பில் ரவி சிந்தித்தான். இதுவரை பல்வேறு முயற்சியாளர்களின் வரலாறுகளைக் கற்றறிந்த ரவிக்கு, அவர்களும் தமது சுய சிந்தனைகளை உற்பத்திகளாக மாற்றி வெற்றி பெற்றவர்கள் என்பது ஞாபகத்திற்கு வந்தது.

ஒரு நாள், ரவியின் மனதில் சிறந்ததொரு சிந்தனை தோன்றியது. "எமது வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்திப் புதிய பொருளொன்றை உருவாக்க முடியுமாயின் பாரியளவிலான அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளலாம்" என்பதே அந்தச் சிந்தனையாகும். இதன்போது, கறுவா தொடர்பில் ரவி விசேட அவதானம் செலுத்தினான்.

ரவி தனது எண்ணத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குப் பின்பற்றிய செயன்முறைகள் பின்வருமாறு,

## 1 பிரச்சினையினை இனங்காணல்

- இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானோர் வாசனைத் திரவியங்களில் கறுவாவையே கூடுதலாக விரும்புகின்றனர். எனினும், இயற்கையான கறுவாவைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகள் இங்கு மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.
- சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானோர் இயற்கை மூலிகை களைக்கொண்டு தயாரிக்கப்படுகின்ற ரொபியை (toffee) விரும்பிச் சுவைக்கின்றனர். எனினும், இயற்கை மூலப்பொருள்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற ரொபிகளை இலங்கையில் காண்பது மிக அரிதாகவே உள்ளது.

## 2 பிரச்சினைக்கான தீர்வும் அதற்கான செயன்முறைகளும்

**தீர்வு:**

- தேனையும் கறுவாவையும் கலந்து ரொபியினை உற்பத்தி செய்தல்.

**செயன்முறைகள்:**

- ரொபிகளைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை இணையத் தளங்களில் தேடியறிதல்.
- குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் வெளிநபர்களிடமிருந்து தேவையான அறிவுரைகளையும் உதவிகளையும் பெற்றுக்கொள்ளல்.
- ரொபிகளின் உற்பத்தி மற்றும் அதன் தரம் தொடர்பில் பரீட்சித்தல்.
- உற்பத்தி செய்யும் ரொபிகளைப் பிரதேசத்திற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்தல்.

## படிமுறை 3.1

"ரவி" வணிகத்தில் பிரவேசித்த முறை தொடர்பிலான விளக்கத்தை நீங்கள் பெற்றிருப்பீர்கள். நீங்களும் சுற்றாடலில் அல்லது சமூகத்தில் காணப்படுகின்ற பிரச்சினையொன்று தொடர்பில் அவதானம் செலுத்தி அதற்கான தீர்வினை முன்வைக்கவும். அதற்குப் பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**A** இனங்கண்ட பிரச்சினையைத் தெளிவாக எழுதவும்.

**B** பிரச்சினைக்குச் சிறந்த தீர்வொன்றை முன்வைக்கவும். அந்தத் தீர்வானது பொருளொன்றாகவோ அல்லது கருவியொன்றாகவோ அல்லது செயற்பாடொன்றாகவோ அல்லது எண்ணமொன்றாகவோ இருக்கலாம்.

**C** உங்களது தீர்வினை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளை எழுதிக்காட்டவும்.

**D** அதற்குப் பின்வரும் முறையிலான அட்டவணையொன்றைப் பயன்படுத்தவும்.

| | |
|---|---|
| பிரச்சினை | |
| பிரச்சினைக்கு முன்வைக்கின்ற தீர்வு | |
| தீர்வினை முன்வைக்கின்ற செயன்முறைகள் | |

செயற்பாடு முடிந்த பின்னர், அதனை முழு வகுப்பிற்கும் ஆக்கபூர்வமாக முன்வைப்பதற்குத் தயாராகவும்.

படிமுறை 3.1 இன்கீழ் நீங்கள் செய்த செயற்பாட்டின் பெறுபேற்றினை அளவிடுகின்ற முறையினைக் காட்டுகின்ற அட்டவணை

| நியதிகள் | பெறுபேற்றினை அளவிடும் திறன் மட்டம் | | | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|---|
| | **மிக நன்று**<br>(10 - 08 புள்ளிகள்) | **நன்று**<br>(07 - 04 புள்ளிகள்) | **விருத்தியடைதல் வேண்டும்**<br>(03 - 01 புள்ளிகள்) | |
| 1.இனங்கண்ட பிரச்சினை ஒன்றிற்குப் பொருத்தமான தீர்வொன்றை முன்வைத்தல் | காணப்படுகின்ற பிரச்சினையொன்றை இனங்காணல்<br>பிரச்சினைக்குத் தீர்வொன்றை முன்வைத்தல்<br>அத்தீர்வினை மாணவரின் கருத்தாகத் தெளிவாகவும் தர்க்கரீதியாகவும் சுட்டிக்காட்டுதல் | காணப்படுகின்ற பிரச்சினையொன்றை இனங்காணல்<br>பிரச்சினைக்குத் தீர்வொன்றை முன்வைத்தல்<br>தீர்வினை மாணவரின் கருத்தாகச் சுட்டிக்காட்டுதல் | காணப்படுகின்ற பிரச்சினையொன்றை இனங்காணல்<br>அப்பிரச்சினைக்கான தீர்வானது தெளிவின்றிக் காணப்படுதல் | ---<br>10 |
| 2.தகவல்களை ஒழுங்காகவும் தெளிவாகவும் ஆக்க பூர்வமாகவும் முன்வைத்தல் | முன்வைக்கப்படுகின்ற தகவல்களின் ஒழுங்கமைப்பும் ஆக்கபூர்வமான தன்மையின் தெளிவும் தெளிவான தொடர்பாடலும் உயர்ந்த மட்டத்தில் காணப்படல் | முன்வைக்கப்படுகின்ற தகவல்களின் ஒழுங்கமைப்பும் ஆக்கபூர்வமான தன்மையின் தெளிவும் தெளிவான தொடர்பாடலும் சாதாரண மட்டத்தில் காணப்படல் | முன்வைக்கப்படுகின்ற தகவல்களின் ஒழுங்கமைப்பும் ஆக்கபூர்வமான தன்மையின் தெளிவும் தெளிவான தொடர்பாடலும் பூரணமற்றுக் காணப்படல் | ---<br>10 |
| **மொத்தப் புள்ளிகள்** | | | | ---<br>20 |

நீங்கள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் உங்கள் வெற்றி தொடர்பில் தீர்மானத்திற்கு வரக்கூடிய முறை கீழே தரப்பட்டுள்ளது.

| **புள்ளிகள்** | 20 - 15 | 14 - 09 | 08 அல்லது அதை விடக்குறைவு |
|---|---|---|---|
| **உங்கள் அடைவின் தன்மை** | மிக நன்று | நன்று | விருத்தியடைதல் வேண்டும் |



- **மொடியூலை முழுமையாகக் கற்ற பின்னர் ஆசிரியர் வழங்குகின்ற மதிப்பீட்டிற்கு சிறப்பாக முகங்கொடுப்பதற்குத் தயாராகவும்.**

இம்மொடியூலினூடாகப் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறைகளைக் காட்டுகின்ற அட்டவணை

| இல. | நியதிகள் | வழங்கப்படுகின்ற புள்ளிகள் |
|---|---|---|
| 1 | தொடர் கணிப்பீடு | |
| | ருப்ரிக்ஸ் **(Rubrics)**<br>1. செயற்பாடு 01<br>2. செயற்பாடு 02<br>3. செயற்பாடு 03<br>(ஒரு செயற்பாட்டிற்கு 20 புள்ளிகள் வீதம் 20×3) | 60 |
| 2 | மொடியூலினை ஒழுங்காகப் பேணுதல் | 05 |
| 3 | மாணவர்களுடன் குழுவாகச் செயற்படுதல் | 05 |
| 4 | இறுதிக் கணிப்பீடு **(Summative Assessment)**<br>இம்மொடியூலை முழுமையாகக் கற்ற பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற கணிப்பீடு | 30 |
| | மொத்தப் புள்ளிகள் | 100 |

நீங்கள் பெற்ற புள்ளிகளை அடிப்படையாகக்கொண்டு உங்களது வெற்றி தொடர்பிலான விளக்கமொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

| மொத்தப் புள்ளிகள் | செயலடைவு மட்டம் |
|---|---|
| 91 - 100 | மிக நன்று |
| 81 - 90 | நன்று |
| 61 - 80 | திருப்தி |
| 41 - 60 | சாதாரணம் |
| 40 இலும் குறைவு | விருத்தியடைதல் வேண்டும் |